Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (26-2-1949) விலை 1 அணா [குண்டு 21

அண்ணாவும் — தம்பியும்!

—தனமனோகரன்—

அண்ணா!

ஆம்! அந்த நல்ல அண்ணா எழுதியது தான் இந்த நல்ல தம்பி! அண்ணா என்றழைக்கும் அன்பு மொழி, யாரைக் குறிப்பிடுகிறது என்று நான் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில் அந்த திராவிடநாட்டு 'பெர்னாட்ஷா' வை—அறிஞர் அண்ணாத்துரையை தமிழகம் மறவாத அளவுக்கு நன்கு அறிந்துள்ளது. அவர்—மறுமலர்ச்சி உலகில் நடமாடும் தமிழ்த்தென்றல்! அரிய கருத்துக்களை அள்ளி அள்ளி வீசும் சொல்லழகன்! நடிப்பின் திறமறிந்த நல்லறிவாளன்!—எழுதிய கதை திரைப் படமாக, அதுவும் நகைச்சுவையரசு கிருஷ்ணனை 'நல்ல தம்பியாக்' க் கொண்டு வெளிவருகிறது என்றால் சொல்லவா வேண்டும். இத்தகைய நல்லதம்பியை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்கள் இடையில் ஏமாற்றங்கள் பல அடைந்தனர். 'நல்ல தம்பி வெளி வருமோ?—வராதோ?' என்ற அய்யச் சொற்களைக்கூட உதிர்த்தனர்.

என்? 'நடிப்பென்றால் எத்தனைகாசு?' என்று கேட்கும் பெரிய மனிதர்கள் வீற்றிருக்கும் தணிக்கைப் போர்டார் சதிச் செயல் புரிந்து—கத்தரிக்கோல் பிரயோகம் செய்து படத்தையே ஒழித்து விடுவரோ என மக்கள் அய்யுற்றனர்—சிந்தை கலங்கினர். அவர்களுடைய சந்தேகம் நியாயமானது தான். ஏனெனில் இன்றைய தணிக்கைபோர்டு காமாந்தகாரக் கடவுளர்களின் காமலீலைகளை சித்தரிக்கும் கட்டங்களுக்கு, நட்டகல்லை தெய்வமென்று கூறி மக்களிடையே காசு பறிக்கும் உலுத்தர்களின் கும்பலுக்கு முழு நிர்வாண கோலங்களை 'குளோசப்பில்' காட்டும் 'தாராசசாங்கம்' போன்ற கொக்கோக படங்களுக்கு காப்பளிக்கும் பொழுது எப்படி இந்த சீர்திருத்தக் கருத்துக்கள் நிறைந்த படத்தை—அதுவும் அறிஞர் அண்ணாத்துரை எழுதிய படத்தை அனுமதிக்கும். தணிக்கைபோர்டில் அமர்ந்திருப்போர் மவுண்ட் ரோடு மகாவிஷ்ணுக்களல்லவா? தங்களது வாழ்வின் குறிக்கோளை நசுக்க முயற்சிக்கும் இத்தகையப்படங்களை வெளிவர அனுமதிப்பாரா? இருந்ததும் கத்தரிக்கோல் பிரயோகம் பல இடங்களில் செய்யப்பட்ட பிறகு 'நல்ல தம்பி' வெளிவர அனுமதிக்கப்பட்டது. பிப்ரவரி 4-ம் தேதியை ஆவலுடன் எதிர்பார்த்தனர் தமிழகமக்கள். அந்த நாளும் வந்தது!

'நல்ல தம்பி' வெள்ளித்திரையில் நடமாடத்தொடங்கியதுமே நாட்டில் பரபரப்பு ஏற்பட்டது. நல்ல கருத்துக்கள் கொண்ட—ஜமீன் ஒழிப்பின் பயனை நாட்டு மக்கள் நன்கு அறிந்து

கிரகப்பலன் எப்படிங்கோ?

மந்திரி சபையை மாற்றியமைக்கவோ,
அலலது சீர்திருத்தவோ,
நான் சென்னை வரவில்லையே, [சர்தார் படேல்.]

கொள்ளும் வகையில் அமைக்கப்பட்ட படம்—துணிகரமான முயற்சி" என பாராட்டிற்று வாலிப உலகம்! 'கண்ணிற்கும் காதிற்கும், ஒரே விருந்து!" எனபுகழுரை தந்தது பத்திரிகை உலகம்! படத்தைக் கண்ணுற்றவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள்—காலத்திற்கேற்ற கருத்துக்களை, உண்மைகளை, அழகாக ஆணித்தரமாக ஒலியிலும் ஒளியிலும் பதித்து எல்லோரது உள்ளத்தையும் தொடும் வகையில் திறமையாக எழுதியிருக்கிறார் அறிஞர் அண்ணா. காமாந்தகாரக் கடவுள்கள் ஒழிய, மனிதவாழ்வு மாண்பு பெற வழி காட்டுகிறார், நல்ல தம்பி மூலம்.

"அறிஞர் C. N. அண்ணாத்துரை கதை, வசனம்."

இந்த எழுத்துக்கள் வெள்ளித்திரையில் பட்டுத்தெரிந்தபொழுது கொட்டகையே அதிர்ந்து ஆடுவதுபோன்று கை தட்டி ஆரவாரம் செய்தனர் மக்கள். சுமார் 10 நிமிடங்கள் வரை ஆரவாரம் அடங்கவில்லை. திராவிட நாட்டினை நாம் அடையப்போகும் காள் வெகு தொலைவிலில்லை என்பதை படத்தின் நடு நடுவே எழுந்த கைதட்டுதல்கள் அறிவித்தன. வெற்றி—வெற்றி! பெருமிதவெற்றி! என்று களிப்பேருவகை எய்தினேன்.

தம்பி!

ஆம்! அண்ணா எழுத்தாளர் உலகிலே—பேச்சாளர் உலகிலே நடமாடும் அறிஞர்—திரு என். எஸ். கிருஷ்ணன் அவருடைய கருத்துக்களை தனது நகைச்சுவையினால் வெள்ளித்திரைமூலமாக சிரித்து சிரித்து ஊட்டும் அண்ணாவிற்கேற்ற தம்பி! நல்ல அண்ணா எழுதிய நல்லதம்பிக்கேற்ற பொருத்தமான நல்ல தம்பி! — நகையரசு என். எஸ் கிருஷ்னன்.

தாழ்ந்த தலைகவிழ்ந்த தென்னாட்டை தனது ஓயாத உழைப்பினால் தனது உணர்ச்சிபொங்கும் சொற்பொழிவினால் விழிப்புறச் செய்தவர் **பெரியார் ஈ. வே. ரா!** அவர் வழி நின்று, கவிதைகள் மூலமாக நாட்டு மக்களுக்கு புத்துணர்வு ஊட்டியவர் புரட்சிக்கவி **பாரதிதாசன்!** தனக்கென அமைந்த அடுக்கு மொழியினால் அழகு தமிழிலே—கருத்துக்கள் நிறைந்த எழுத்தோவியங்களை தமிழுலக வாலிபர்களுக்கு அளித்து வாலிப உலகிலே ஒரு மறுமலர்ச்சி சகாப்தத்தைத் தோற்றுவித்தவர் அறிஞர் **அண்ணாத்துரை!** அதே போல, இவர்களனைவருடைய கருத்துக்களை ஒன்று திரட்டி மக்களிடையே வெள்ளித்திரை மூலமாக அதிவேகமாகப் பரவும்படி செய்து வருகிறார் கலைவாணர் **என். எஸ். கே.** தமது உயரிய நடிப்பாலும், நகைச்சுவை வன்மையாலும். தனது நகைச்சுவை கட்டங்களின் மூலம் மக்களை சிரிக்கச்செய்து—பிறகு சிந்திக்கவும் தூண்டுகிறார் அவர். அதுதான் அவரது உயரிய—தனி சிறப்பு.

பழமையை, மூடப்பழக்க வழக்கங்களை சாடுபவர் கிண்டல் செய்பவர் ஒருவர் தமிழ்ப் பட உலகிலே உண்டு என்றால் அது கலைஞர் என். எஸ். கே, யாகத்தான் இருக்க முடியும்! அவருடைய நகைச்சுவையுடன் கூடிய நடிப்பு கோமாளித்தனமானதல்ல. கலையான நகைச்சுவை—சிந்தனையின் உயிர்ப்பு. இத்தகையகுணநலன்கள் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நகைச்சுவையரசு நல்ல தம்பியாக நடிக்கிறார் என்றால் கேட்கவாவேண்டும். பகுத்தறிவுப் பிரச்சாரத்தைப் பக்குவமாகச் செய்துவிடுகிறார் அவர், நல்ல தம்பியின் மூலமாக.

நல்ல தம்பி!

கிராம மக்களுக்கெனவே உழைத்து வரும் நல்ல தம்பி எதிர்பாராவிதத்திலே ஜமீன்தாரராகிறான். ஜமீன் அரண்மனையிலுள்ள படாடோபங்களை வெறுத்தொதுக்குகிறான். ஜமீன்தாரராகப் பதவியேற்ற பின்னும் கொண்ட கொள்கையினின்றும் பிறழ்ந்தானில்லை. தன் பெயருக்கேற்றவாறு 'நல்ல தம்பி யாகவே, நடந்து வருகிறான். ஜமீன்தாரின புதல்வி புஷ்பா நல்ல தம்பியை நாகரீக முறையில் வாழும்படி கூறி அவனைத் திருத்த முயற்சிக்கிறாள். முயற்சிபலனளிக்காது போகவே அவனை வெறுக்கிறாள். ஜமீன் மானேஜர் பூபதி இந்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டு நல்ல தம்பியைப் பற்றி புறங்கூறி அவளைத் தன் வசப்படுத்தி தான் ஆட்டுவிக்கும் பம்பரமாக மாற்றிவிடுகிறான். இதற்கிடையில் ஜமீன் நிலங்களை உழைக்கும் மக்களுக்கே உரிமையாக்குகிறான் நல்ல தம்பி. கிராம மக்கள் வாயாரப் புகழ்ந்து போற்றுகின்றனர் நல்ல தம்பியை!

அன்று தமிழர் திருநாள்! மிக்க விமரிசையாக களிப்புடன் புத்தாடை பூண்டு மக்கள் அனைவரும் விழா கொண்டாடுகிறார்கள். வக்கீலை அழைத்துவர வடநாடு சென்றிருந்த ஜோதி திரும்பி வரும்பொழுது இவற்றைக்

8-ம் பக்கம் பார்க்க

போலீஸ் தேவை! தேவை!!

"அறிவழகன்"

போலீஸ் தேவை! தேவை!! என்றவுடன் எங்கேயாவது கலவரமா? என்ற எண்ணம்தான் எழச் செய்கிறது. போலீஸ் என்பவர்கள் எதற்காக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை ஆராய்ந்து முடிவு செய்யாத அவசர குடுக்கைகள் பொதுஜன பாதுகாப்புக்கு என்பார்கள். அறிவு எனும் வாளை, படிப்பு எனும் சாணைக் கல்லில் தீட்டி, அனுபவம் எனும் கேடயம் கொண்டு போர் நடத்தி வெற்றிகண்டவர்களுக்குத் தான் இவ்வுண்மை எளிதில் புலப்படும். இவ்வகையச் சார்ந்தவர்தான் என் நண்பர் ஒருவர்.

நகைச்சுவை, பகுத்தறிவாளர், உலகாயுதவாதி என பல ரகம் உண்டு நண்பர் வகையிலே. ஆனால் இம்மூன்றும் ஒருங்கே அமைய பெற்றவர்தான் என் நண்பர் கலைநாதன்! கலைநாதன் என்னும் போதே, அடடா! என் நெஞ்சம் கொள்ளை போவது போன்றுதான் எனக்கு தோன்றுகிறது. ஆனால் உங்களுக்கு எப்படியோ?

நகைச்சுவைதான் என்னை நண்பரிடம் நட்பு கொள்ளச் செய்தது. நட்பு பகுத்தறிவு பாசறையை காட்டி, இதோ! என விரட்டிற்று என்னை.

நண்பர் கலைநாதன் கருப்புடைகாரல்ல; கதருடை, அவர் நாத்தீகர்; ஆனால் ஆத்மீக மெய்யன்பர்கள் கூட்டுறவு அதிகம். அவர் வறுமையின் இருப்பிடம்; ஆனால் முகத்திலே புன் சிரிப்பு.

நண்பர் கலைநாதன் ஓர் நெய்பாவி வண்டியின் பொறுப்பாளராக (பஸ் கண்டக்டராக) இருந்தவர்தான். ஆனால் இந்த சீர்கெட்ட பணி அவரது சிவந்தமேனியை சின்னபின்னப் படுத்திற்று. படுத்த படுக்கையிலே கிடந்தார். முடிவிலே, நல்ல நிலையடைந்தார். ஓர் வெற்றிலைப் பாக்கு கடையும் திறந்தார். ராஜப்பார்ட் ரெங்கதுரைபாகவதர் போல. ஆனால் ரெங்கதுரை பாகவதர் வெற்றிலைப் பாக்கு கடையை மூடுவிழா நடத்திவிட்டு நாடக கம்பெனிக்கு போய்விட்டார். இவர் இன்னும் வெற்றிலைப் பாக்கு கடை கலைநாதன் தான். இவர் சாரலிலே நான் அடிக்கடி ஒதுங்குவதுண்டு. அடிக்கடி வாதம் ஏற்படும் நண்பர் கலைநாதனுடன். கண்டவைகளை யெல்லாம் கருத்துக்களாக கலைநாதனிடம்வைப்பேன். ஆனால், அவரோ சண்டாளர்கள் செய்த சண்டித்தனங்களை காட்டி, இவைகளுக்கு முதலில் சாவுமணி தீட்டுங்கள் என தீப்பொறி பறக்க பேசுவார். முடிவிலே பணிந்தே தான் தீரவேண்டும் மற்றவர்கள்.

நண்பர் கலைநாதனிடம் எதையாவது பேசி தப்பித்துக் கொள்ளலாமென்றால், முடியாது. ஓர்நாள் நிகழ்ச்சியே எனக்கு இப்பாடம் தந்தது.

வேலை நிறுத்தங்கள் நடக்கின்றனவே அது, இச்சுதந்திர நாட்டுக்கு நல்லதா? கெடுதலா? என்று பேசிக் கொண்டே வந்த நான், பொதுஜனங்களுக்குத் தானே தொல்லையென்று சொல்லி தப்பித்துக் கொள்ளப் பார்த்தேன். நண்பரோ, பொதுஜனங்கள் என்பவர்கள் யார்? என்ற கேள்வியை என்னையே கேட்க ஆரம்பித்துவிட்டார். அவரது வினவிற்கு நான் திரு திருவென விழித்து, தீடீரென கூறினேன் ஏழைகள் என்று. அவரோ, வேலை நிறுத்தம் செய்பவர் பணக்காரர்களோ? என்று கேட்டுவிட்டு, விளக்கம் கூற ஆரம்பித்துவிட்டார். நாம் குற்றவாளிகளை சிறைசாலைகளுக்குச் சென்று பார்ப்போமாகில் அவர்களை சிறை கூண்டிலே அடைக்கப்பட்டிருப்பதாகவும், அவர்கள் நம்மை பார்த்தால் நாம் சிறை கூண்டிலே அடைபட்டு கிடப்பதாக அவர்களுக்கும் தெரியும். இதுபோல, இது தொழிலாளர்கள் நிறைந்த நாடு. அதுவும் நம் நாட்டிலே முதலாளிகளே கிடையாது, திருப்பதி வெங்கிடாஜலபதியைவிட.

ஆகவே, ரெயில்வே தொழிலாளிகள் வேலை நிறுத்தத்தின்போது தபால் தொழிலாளர்களைக் கண்டால் பொதுஜனங்களாக தோன்றும். தபால் தொழிலளர் வேலை நிறுத்தத்தின் போது ரெயில்வே தொழிலாளர்கள் பொதுஜனங்களாகவும் தோன்றும். ஆகவே பொது ஜனங்கள் என்பது புரட்டர்கள் செய்யும் பணி என்றார்.

என்ன, நண்பரே! பைத்தியமா? என்றேன். ஆம்! இப்பைத்தியக்கார நாட்டில் நானும் ஓர் பைத்தியம் என்று கூறிவிட்டு, மேலும் கூறினார், தொழிலாளர்கள் இரண்டு ரூபாய் சம்பள உயர்வுக்காக வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அப்போது பொது ஜனத்துக்கு பங்கம் எனக் கூறி நசுக்கப்படுகின்றனர் ஆளவந்தோர்களால். ஆனால், அவர்களே கூறுகிறார்கள். தினப்படி ரூபாய் 7-8-0 போதாது, தினம் ரூ 12-8-0 வேண்டும், இன்றேல், வேலை நிறுத்தம் தொடங்குவோமென எச்சரிக்கின்றனர். இவர்கள் கூறுகின்றனர் பொதுஜன காப்பாளர்களென்று. பொது ஜனங்கள் மீது அக்கரையிருந்தால் "ஜெயப்பூர் மாநாட்டுக்கு இரண்டு லக்ஷ ரூபாய், இது அதிக செலவா" என்று கூறுவார்களா? சட்டசபைக்கு வராமலேயே சம்பளம் பெறுவாரா முத்துராமலிங்க தேவர்? இன்னும்' நேருவுக்கு சம்பளம் எவ்வளவு என்று சட்டசபையிலே வினு எழுப்பியபோது, நேரு படேலை பார்க்க, படேல் சாஸ்திரியை பார்க்க, சாஸ்திரி பஞ்சாங்கத்தை புரட்ட, பஞ்சாங்கம் கலியுக கூத்து என காட்சியளிக்கும் சுதந்திர கேலிக் கூத்து நடைபெறுமா? இவைகளை யெல்லாம் நன்கு ஆராய்ந்து பாரும் என்று கூறிவிட்டு, நான் ஏன் பொதுஜன சௌகரியத்தை முன்னிட்டு கடை வைத்திருப்பதாக விளம்பரம் செய்தேன் தெரியுமா? என் பிழைப்பை நடத்த, என்று பேசிக் கொண்டே ஓர் விளம்பரத்தைக்காட்டினார். அதிலே, "தற்போதைய அகவிலைய்ய முன்னிட்டு அரையணு பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே இவைகளை பொருட்படுத்தாமல் பொது ஜனங்களாகிய நீங்கள் ஆதரிப்பீர்கள் என்று நம்புகிறோம்" என காணப்பட்டது. இதை பார்த்தீரா! என்று தொடர்ந்தே பேச ஆரம்பித்துவிட்டார்.

"நான், நேற்று திருச்சி சந்திப்புக்கு போகவேண்டியிருந்தது. வீட்டை விட்டு கிளம்பினேன். புகைவண்டி நிலையத்திலே புகை வண்டி போகும் நேரமில்லாத காரணத்தால் தெப்பக்குளம் பஸ் நிலையத்துக்கு வந்தேன். பஸ்களிலே ஜன நெருக்கடியாக இருந்த காரணத்தாலும், நேரம் அதிகமாகி விட்டபடியாலும் குதிரை, மாட்டு வண்டி நிலையத்தை அடைந்தேன். அவர்கள் என்னை, எஜமான்! எஜமான்!! என்றழைத்தார்கள் வறுமையின் காரணத்தால். நானும் விரைவில் செல்ல வேண்டியிருப்பதால் நல்ல வண்டியில் ஏறிக் கொண்டு, குறைந்த கூலி பேசிச் சென்றேன்.

சென்ற காரியங்களை முடித்துக் கொண்டு திருச்சி சந்திப்பை அடைந்தேன். புகைவண்டி தொடரையும் கண்டேன். டிக்கெட் வாங்கியதுதான் தெரியும், வண்டிதொடரிலே அமர்ந்திருந்தேன். திருச்சி கோட்டை வந்து சேர்ந்தேன. வரும் வழியிலேயே என்னை பசி வாட்டிற்று. சுற்றிப் பார்த்தேன். எங்கு நோக்கினும், மந்தையிலே மாடு மேய்ந்த கந்தப்பன் கடைகளாகவே இருந்தன. முடிவிலே அங்கு சென்றேன். உண்டகளைப்பினல் தள்ளாடி தளளாடி நடந்து வந்தேன். என் கால் வலியுற்றது. பஸ்ஸை நாடினேன். சிந்தாமணி இல்லம் ஏகினேன். பாருங்கள் என் ஆதரிப்பை! நானும் நீங்கள் கூறும் பொதுஜன பட்டியலில் சேர்ந்தவன்தான்," என்று கூறினார்.

"என்ன, கலைநாதா! பெரியார் பரந்தாமனை பாரி என்று மனம் விட்டு கூற ஆரம்பித்தாரென்றால், நீவிர் பொது ஜனங்கள் என்று சொல்பவர்கள் புரட்டர்கள் என்று கூற தைரியம் வந்து விட்டதே! அதுசரி, போலீஸ் எதற்காக? என்பதாவது உமக்குத் தெரியுமா?" என்ற அசட்டு கேள்வியை வீசினேன். அவரா விடுவார் என்னை. நண்பரே! நாட்டின் கலவரத்தை அடக்க ஆங்கிலேயர்கள் காலத்திலே பயன்பட்டது போலீஸ். ஆனால் இன்றோ நாட்டில் கலவரம் உண்டாக்க போலீஸ் பயன்படுகிறது, என்று பதட்டமிககொண்டு வாரும் நண்பரே! காட்டுகிறேன் என கூறி என்னை அழைத்துக் கொண்டு கடைவீதியின் வழியாக வந்தார்.

சுவர்களிலெல்லாம் "சென்னை மாகாண மோட்டார் தொழிலாளர்கள் பொது காரியதரிசி திரு M. சீதாராம நாயுடு, உபகாரிய தரிசிகள் ரெங்கநாதன், சங்கரன் 24-1-49ந்தேதி மாலை கைது செய்

வெற்றி பாதையில்?

மான்

வையமொரு பூக்காடு
வாழ்கின்ற நம்நாடோ
துய்யதமிழ் நல்லறிவுத்
தேனீக்கள் துளிதுளியாய்
சேர்த்துவைத்த தேனின்கூடு
சாதிமதப் புகைமுழக்கி
பேர்த்தெடுக்க மதுக்கூட்டை
ஆர்த்தநாளில் பகையடக்கிப்

புத்துலகம் படைக்கவந்த
நம்பெரியார் குரலைப்போல
முத்தெடுத்துச் செல்லதமிழ்
கப்பல்பல முத்தமிட்ட
துறைகளிலே வட்டமிடுவது
யார்கப்பல்? கொள்ளையடிக்க
திருநாட்டை யாரிந்தஅப்பன்
எனக்கப்பல் மிதக்கவிட்ட

சிங்கநெஞ்சர் சிதம்பரத்தை
சிறுநரிகள் சலசலப்பால்
மறைத்திட்டர்! முறைகும்பகை
மூச்சடக்க அவரின்குரல்
கீழ்க்கடலில் கேட்குதின்று
நம்மவரின் பெருவிழாவில்
கேட்கவில்லை ஈரோட்டார்
திருக்குரல்கள் ஒன்றுகூட

மறைத்திட்டார் அந்நாளில்
சிதம்பரனுர் பெருஉழைப்பை!
மறைக்கின்றார் இந்நாளும்
மணக்கவரும் நமதுழைப்பை!
சிதம்பரனுர் சிறுவெற்றி நம்
பெறுவெற்றி மறக்கவேண்டாம்
இதந்தரும் ஈரோட்டுப்
பாதைக்கிதோர் வெற்றியதால்

யப்பட்டார்கள். ஆகவே அதையொட்டி திருச்சி பஸ் தொழிலாளர்களனைவரும் இன்று (25-1-49) மாலை 4 மணி முதல் 6 மணிவரை ஹர்த்தால் செய்வார்கள், என்றிருந்தது. எங்கு நோக்கினும் வால் போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. நடந்து செல்வோர் அனைவரும் இதை பற்றியே பேசிக்கொண்டே சென்றார்கள். இதைப் பற்றி பேசாதவர்கள் ஒரு சிலரே, தெரியாத காரணத்தாலல்ல; அலட்சிய மனப்பான்மையால்.

மணி நான்கு அடித்தது. நாங்களும் நடந்து கொண்டே பஸ் ஸ்டாண்டு நோக்கி நடந்து வந்து சேர்ந்தோம். பஸ்களெல்லாம் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்தன. பிரயாணிகளோ வண்டியில் ஒருவரும் இல்லை. ஆனால் வண்டியை சூழ்ந்து கொண்டு "எப்போது போகும்?" என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

குதிரை, மாட்டு வண்டிக்காரர்களோ, ஐயா! ஐயா!! வாருங்கள். உங்களை சீக்கிரமாக கொண்டு போய் விடுகிறேன். என் குதிரை வேகமாகப் போகும் என்று விளம்பரம் செய்து கொண்டேயிருந்தார்கள். ஸ்ரீரங்கத்துக்கு எவ்வளவு கட்டணம்? என்று துணிந்து கேட்டார் ஓர் ஆசாமி. வண்டிக்கார தோழரோ, "ஆளுக்கு மூன்றணா" என்றார். கேட்ட ஆசாமியோ, "போமய்யா போம், பஸ்ஸுக்கே இரண்டணாதானே? நாங்கள் பஸ்ஸிலேயே சென்று விடுகிறோம். உன் வண்டி எங்களுக்கு தேவையில்லை," என்று கூறிக் கொண்டு குதிரை மாட்டு வண்டி தொழிலாளர்களின் எதிர்ப்பாளர் ஆகிவிட்டார்.

விசில் சப்தம் கேட்டது. குதிரை வண்டியும் நகர்ந்தது. போலீஸ் அதிகாரிகள் பஸ் தொழிலாளர்களை அணுகினர். போலீஸ் அதிகாரிகள் பஸ் தொழிலாளர்களை நோக்கி, "இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்? என்று புரியாத பாவனைகளில் கேட்டனர். ஆனால் பஸ் தோழர்களோ, அப்பா! நகைச்சுவையில் பேச ஆரம்பித்துவிட்டனர், விளம்பரத் தாளை சுட்டிக் காட்டி, "அதோ! பாருங்கள்" எனறார் ஓர் பஸ் தொழிலாளி. "அது தெரிகிறது, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்றுதான் கேட்கிறேன்" என்று சற்று அதட்டி பேசினார் சப் இன்ஸ்பெக்டர். பஸ் தோழர்களோ, "ஹர்த்தால்" என்றார்கள். "சரி" என்று போய் விட்டனர் போலீஸ் அதிகாரிகள்.

இதற்கிடையில், நண்பரே! இவ் வேலை நிறுத்தம் எதற்காக? என்றேன். அதற்கு அவர்; "மத்திய சர்க்காரிலே கோர்ட் ஒன்று நியமித்து சம்பள கமிஷன் தயார் செய்தார்களே, பஸ் தொழிலாளர்களுக்காக; அது இன்னும் சர்க்கார் பஸ்களிலேயே அமுல் நடத்தப்படவில்லையாம். மாதங்களோ பத்து முடிவுறப் போகிறது. கேட்டாலோ, பஸ்களெல்லாம் தேசிய சொத்து. ஆகவே தேசத்துக்காக பாடுபட வேண்டுமேயொழிய கூலிக்காக போராடக் கூடாது என்கிறார்களாம். இதைப் பார்த்தே இன்னும் பல இடங்களில் தனிப்பட்ட முதலாளிகள் சம்பள கமிஷனை அமுல் நடத்தாமல் சண்டித்தனம் செய்கிறார்களாம். இவைகளை தீர்க்கவே தொழிலாளர்களுக்காக சமரஸ அதிகாரிகளை நியமித்திருக்கின்றனர் ஆளவந்தோர். ஆனால், அவர்களுக்கோ "தரகர்" வேலையைத் தவிர வேறு அதிகாரம் கிடையாது. இந்நிலையிலே தொழிலாளர்கள்தான் என் செய்வார்கள். இறுதியிலே, வேலை நிறுத்தத்தை தவிர வேறு என்ன காண முடியும்." என்றார். அதற்குள் மணியும் 5-40 ஆகிவிட்டது. இதுவா? நான் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன் என்று கூறிவிட்டு, இந்தப் பக்கம் திரும்பினேன், போலீஸ்காரர்கள் தடிகளுடன் பஸ் முதலாளிகள் முன்னே நடந்துவர, போலீஸ் அதிகாரிகள் அவர்களை சூழ்ந்துவர, கதர் சட்டை வீரர்கள் காட்சியளிக்கும் நிலைமையைக் கண்டேன்.

போலீஸ் அதிகாரிகள் தொழிலாளர்களைக் கூப்பிட்டனர். முதலாளிகள் வண்டியை யெடுக்க சொல்லி மிரட்டினர். போலீஸ் அதிகாரிகளும் சிறையிலடைத்து விடுவதாக பயமுறுத்தினார்கள். கதர் சட்டை வீரர்களோ, வேலை நிறுத்தக்காரர்களை சுட வேண்டும் என கொக்கரித்தனர். "மாமியார் உடைத்தால் மண் சட்டி, மருமகள் உடைத்தால் பொன் சட்டி" தானே என்ற எண்ணம்தான் ஏற்பட்டது, பரிதாபத்திற்குரிய கதர் சட்டைக்காரர்களை கண்டு.

அதிகாரிகள் அட்டகாசத்துக்குப் பயந்த ஓர் பஸ் தோழர் பஸ்ஸிலேஏறி உட்கார்ந்தார். என் நெஞ்சம் படபடவென துடித்தது. நாம் என் செய்வது என எண்ணிய நான் மேலும் கவனித்தேன். வண்டியின் சக்கிரத்தடியில் ஓர் உருவம் படுத்திருக்கக் கண்டேன். உருவம் சிறியதே; உற்சாகம் அதினால் ஆக அந்த வேளை நிறுத்தம் நடந்த வேளைதான் ஜனங்கள் தங்கள் காரியாலயங்களுக்குச் செல்லத் துடிக்கும் வேளைஎன்பதை யாரும் மறந்து விடுவதற்கில்லை".

இதுவும் அப்பத்திரிக்கையின் முகாரியின் தொடர்ச்சி. சர்க்காரிடம் கேட்டு சலித்த தோழர்கள் தங்கள் இறுதிவேலை நிருத்தத்தின் எச்சரிக்கையாக அடையாளவேலை நிறுத்தம் செய்தனர். அதுவும் தக்க விளம்பரம் செய்த பிறகு. இந்த ஒரு மணிநேரத்தில் பொது ஜனங்களுக்கு பங்கம் ஏற்பட்டு விட்டது என்று எண்ணினால் இப்பத்திரிக்கை அறிவுக்கு பொருத்தமற்ற செய்திகளை பல வருடங்களாக தந்து ஜனங்களை மடையர்களாக்கியிருக்கிறதே இதை நீங்கள் என்ன எண்ண வேண்டும்? அப்படித்தான் வைத்துக் கொள்ளுங்களேன் எந்த ஜனங்கள் ஆபீஸுக்கு செல்ல துடித்தனர்? கோட்ஸே கும்பல்களா? அல்லது பாமர திராவிடர்களா? சுயஜாதி மித்திரன் என்று பெயர் வைத்தாரே, குத்தூசியார் அவருக்கு எமது வணக்கம். அது இப்படியிருக்கு!

"இது சமயம் அவர்கள் முன்னதாக ஜனங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவுமில்லை".

இது அப்பத்திரிக்கையின் குற்றச்சாட்டு மேலே கூறியிருக்கிறது அறிக்கை வெளியிட்டார்களென்று அதற்கப்பால் இப்படி கூறுகிறது பாவம்! மறதி அதிகம் போலிருக்கிறது. இருப்பினும் திரு எம். சீதாராம நாயுடு அவர்களால் சர்க்காருக்கு ஏழு வேலை நிறுத்த நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பத்திரிக்கை விரும்பினால் தேதியை வேண்டுமானாலும் வெளியிடுகிறோம். நிற்க அவ்வப்போது பொது ஜனங்களுக்கு விளம்பர நோட்டீஸுகள் அச்சிட்டும், பத்ரிதிக்கைகளிலும் வழங்கியுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன்தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பத்திரிக்கை ஆசிரியருக்கு. இறுதியாக 15-8-48 தேதி சர்க்கார் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதாவது கோர்ட் நியமித்த சம்பள கமிஷன் தனிப்பட்ட முதலாளிகளுக்கே; சர்க்காருக்கல்ல. ஏனெனில் சர்க்கார் பஸ்களெல்லாம் தேசிய சொத்து. ஆகவே இத்தொழிலாளர்கள் யாரும் கூலிக்காக போராடக்கூடாது என்பதே இதன் பிறகு அவ்வேழை தொழிலாளர்கள் என் செய்வார்கள்? என்ன அப்பத்திரிக்கை ஆசிரியரை கேட்டு விட்டு. மேலும் ஆசிரியரின் தகவல்களை கொடுக்கிறோம்; கேளுங்கள்.

"பஸ்கள் மீதும், பிரயாணிகள் மீதும் கல் வீசப்பட்டதற்கு நேரடியான பொருப்பாளிகள் யாராயினும், தொழிலாளர் கட்சிக்கு அதைப்போல் ஹானி விளைவிக்கக் கூடியது எதுவுமில்லை;

இதை நான் யோசித்து பார்த்த போது, இப்பத்திரிக்கை ஆசிரியர் வீட்டினுள்ளேயே உட்கார்ந்து கொண்டு பத்திரிக்கை நடத்தும் வகையினை சார்ந்தவர்தான் என்று நினைக்கிறேன். ஆகவே இப்பத்திரிக்கைகளுக்கெல்லாம் என்று முற்றுப்புள்ளி வைக்கப்படுமோ தெரியவில்லை.

"சர்க்கார் பஸ் சிப்பந்திக்கள் ஸ்ட்ரைக்கை யொட்டி இன்று காலை 7-30 மணிக்கு பஸ்களை ஓட்டுவதற்கு வேறு சில சிப்பந்திகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தனர். வேலை நிறுத்தத்தில் அவர்கள் வந்து வண்டிகளை எடுக்கும் போது ஸ்ட்ரைக்கில் ஈடுபட்ட தொழிலாளர்கள் சாத்வீக முறையில் வழியின் குறுக்கே படுத்து பஸ்கள் வெளிவரா வண்ணம் தடுத்தனர். உடனே மலபார் போலீஸார் லாரி விரைந்து வந்து வழி மறித்த முதற் குழுவினரை கைது செய்து லாரியில் ஏற்றிச்சென்றது. உடனடியாக இரண்டாவது குழுவினர் வழி மறித்தனர் அப்போது மலபார் போலீஸார் அவர்களை சுற்றி வளைத்துக்கொண்டு தடியடி பிரயோகம் செய்தனர். காயமடைந்த தொழிலாளர்களையும், கைது செய்து லாரியில் ஏற்றி சென்றனர்.

ரோடில் சென்று கொண்டிருந்த சில தொழிலாளர்களையும் ஆட்சேபகரமான செய்திகள் பேசினார்களென குற்றம் சாட்டி கைது செய்ததாகத் தெரிகிறது. சர்க்கார் பஸ் போக்கு வரத்து சிப்பந்திகள் சங்கதலைவர் பி. ராமனாதன், பொது செயலாளர் சீதாராமநாயுடு கூட்டுச் செயலாளர் டி. சங்கரன் ஆகிய மூவரும் வேலை நிறுத்தம் செய்யத் தூண்டியதாக குற்றங்கள் காட்டி மாலை கைது செய்யப்பட்டனர். அடையாள வேலை நிறுத்தத்திலே கலந்து கொண்டதாக ஏழுமலையும், மற்றும் இருபஸ் ஓட்டிகளும் கைது செய்யப்பட்டனர். ஜனங்கள் இவைகளை யெல்லாம் அறியுமா அவ்வயோக்கிய பத்திரிக்கை? இவ்வளவும் எங்களுக்கு திரட்டி கொடுத்தது திராவிடர் தினசரி 'விடுதலை'தானே! இதைச் சென்னை 25-1-49 தேதி விடுதலையில் முதல் பக்கத்திலே "சர்க்கார் பஸ் சிப்பந்திகள் மீது தடியடி பிரயோகம் "பாடி கார்டு லயனில் மறியல் என்ரோலி: 10 பேர் கைது. நகரில் போலீஸ்—டிரைவர்கள்—கண்டக்டர்கள் என தலைப்பிட்டு எழுதியுள்ள செய்திகளைக் கண்டவர்கள் உணர்வார்கள்.

ஆகவே தேசியதாள்கள் எனக் கூறி தகடுதித்தம் புரியும் இப்பத்திரிக்கைகளை நாம் சும்மா விட முடியுமா? பாட்டாளிகளே! புறப்படுங்கள் போருக்கு. முதற் கண் பத்திரிக்கை போர்! போர்!! எபா!!! என்றேன் அதற்குள் எனது நண்பர் கலைநாதன் குறுக்கிட்டு, உங்களது உரிமைப்போராட்டத்தை யடக்க போலீஸ் தேவை! தேவை!! என்றார்.

—: (x) :—

டெலிபோன் : 86729

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌண்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

விற்பனைத் தோழர்களுக்கு

பிப்பிரவரி மாதம் முடிய எமக்குச் சேரவேண்டிய பாக்கி பூராவையும் மார்ச் மாதம் 3-ம் தேதிக்குள் எமக்குச் சேரும்படியாக அனுப்பித்து விடக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அபாய அறிவிப்பு

தொகைகளை அனுப்பாமல் இருந்துவரும் எம் மதிப்பிற்குரிய விற்பனைத் தோழர்கள் பெயர்கள் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும்.

நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	26-2-49

கோபாலபுரம்
கோவாப்பரேட்டிவ் ஸ்டோர்ஸ்

சென்னை கோபாலபுரம் கோவாபரேட்டிவ் ஸ்டோர்சில் நெடுநாளாகவே பலவித அக்கிரமங்கள், அநியாயங்கள், கள்ள மார்க்கட், பொய்க் கையெழுத்துக்கள். கணக்கேடுகளை மாற்றல் முதலிய பலப்பல அக்கிரமங்கள் தாண்டவமாடிவருவதாக மிக நம்பகமான இடத்திலிருந்து அறிகிறோம். மற்றும் இதைப் பற்றி தோழர் குமாரசாமி என்பவர் பல அதிகாரிகளிடம் புகார் செய்தும், பல ஆதாரங்களுடன் ரூபகாரம்செய்தும், அதிகாரிகள் இது வரையும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிய மிகவும் வருந்துகின்றோம். ஏன் நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார்கள் என்பது தான் எமக்கு சற்றேனும் விளங்கவில்லை. நாட்டிற்குள் நடந்தேரிவரும் கள்ளமார்க்கட், கொள்ளை லாபம், லஞ்சம் முதலிய ஒழுக்க ஈனங்களைத் தடுத்தாக வேண்டுமென்று அல்லும் பகலும் அக்கரை காட்டிவரும் ஆட்சியாளர். இவ்விஷயத்தில் ஏன் அசிறத்தை காட்டிவருகின்றனர் என்பது எமக்குப் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த ஸ்டோர்சுக்குள்ளாகவே மற்றவர்கள் அடிக்கும் கொள்ளைக்கு உடந்தையாக இல்லாது எவராவது ஒருவர் தட்டிக் கேட்கும்படியான நிலைமை ஏற்பட்டால் அவரை உடனே வெளியே போகச் சொல்வதும், எவ்வித காரணமுமின்றியும், நோட்டீஸ் கொடுக்காதபடிக்கும், சம்பள பாக்கியை பட்டுவாடா செய்யாமலும், வேலையிலிருந்து நீக்குவதுமாயிருந்தால், இந்நடவடிக்கையை ஆணவமென்று சொல்வதா, அல்லது அசட்டுத்தனமென்று சொல்வதா, அல்லது அவர்களை அசைக்க முடியாதென்ற கர்வமா என்றே ஆட்சியாளரைக் கேட்கின்றோம்.

இவ்வக்கிரமங்கள் யாவும் பொது மக்களின் நலனையே தாக்குமென்பதை எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது?

இனியேனும் ஆட்சியாளர் உடனடியாக தக்க நடவடிக்கை எடுத்து இவ்வக்கிரமங்களைப் புரிந்து வரும் சண்டாளப் படுபாவிகளுக்கு தக்கதோர் பாடத்தைக் கற்பித்து அவர்களும் அவர்களுடைய கயமைத்தனத்தால் ஜீவித்து வந்த மற்ற பலரும் இரத்தக் கண்ணீர் சொட்டும்படிச் செய்ய வேண்டுவது ஆட்சியாளரின் முதற் கடமையாகும்.

"முக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்றபடி குற்றத்திற் குரியவர்கள் எவராயிருந்தாலென்ன? ஆட்சியாளர் அதுவும் திவிராட மந்திரி சபை பதவியிலிருக்கையில், நீதி கண்டிப்பாக வழங்கப்படும் என்பதில் எமக்கு கடுகளவேனும் சந்தேகமில்லை. இது எமது பணிவான வேண்டுகோளுமாகும்.

——: (x) :——

பிராமண மாநாடு

சமயத்தையும் காலப்போக்கையும் மக்களின் முன்னேற்றத்தையும் அவ்வப்போது அறிந்து தத்தம் பழைய பழக்க வழக்கங்களிலிருந்து விடுபட்டு, தம்மைத் திருத்தி காலத்திற்கேற்ப தம்மை அமைத்துக் கொள்ளத் தவரும் ஒருவர், அவர் எவராயினும், அறிவிருந்தும் அறிவில்லாதவர். அதாவது அறிவை இழந்தவரேயாவர். செவிகளிரண்டிருந்தும் செவிடரேயாவர் உடம்புக்குள் உயிரிருந்தும் நடை பிணமே யாவர்.

அண்மையில் சேலத்தில் பிராமணர் இரண்டாவது மாநாடும் கூடிக் கலைந்தது. நிறைவேற்றப் பட்ட தீர்மானங்களோ அநேகம். வேதாளம் முருங்க மரம் ஏறிக்கொண்டதென்ற தல்லாமல் மற்றொரு விசேஷமும் ஏற்பட்டு விட்டதாகத் தெரியவில்லை. அறிவுமிக்கோர் என்றே பறைசாற்றிவரும் பார்ப்பன சகோதரர்கள் காலத்தை உணராமல் இன்னும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருப்பதையும் பாடவிரும்புவதையும் காண நாம் மிகவும் வருந்துகிறோம். தென்னாட்டு ஆரியர்கள் என்ற பார்ப்பனர்களுட் திராவிடர்களும் ஒன்றுசேரும் நாள் எந்நாளோ என ஏங்கிக்கிடக்கும் எம்போன்றோருக்கு உண்மையாகவே மிக்கதோர் வேதனை தருவதாகும். வேஷங்களும் விதங்களும் மாறுகின்றவேயொழிய விஷமத்திலோ விஷயத்திலோ ஒரு துளியேனும் வித்தியாசம் ஏற்பட்டுவிட்டதாகத் தெரியவில்லை. இது நாட்டின் நலனுக்கா என்றுதான் கேட்கின்றோம். அறிவாளிகள் என்றோருக்கு அழகா என்றுதான் கேட்கின்றோம். பாருக்கு வழிகாட்டுபவர் என்றே சொல்லும் பத்திரிகையாசிரியர்களும் உற்றதைக் கைக்கொள்ளாமல் இன்னும் பழைய ஜாதகத்தையே புரட்டி மக்களை ஏமாற்றி வரவேண்டுமென்ற ஒரே பணியில் இரவும் பகலும் ஈடுபடுவதாயிருந்தால் இனி சாமான்ய மக்களைக் குறைகூறுவதினாலாய பயனென்ன? பார்ப்பன சகோதரர்களை ஆசிரியர்களாகக் கொண்ட பத்திரிகைகள் கபோதித் தனத்தை வளர்க்கும் வகையிலும் அறிவுக்குப் புறம்பாகவும் எழுதுவதும் அதற்குச் சமாதானம் சொல்லும் வகையிலோ அல்லது கண்டித்தாகவேண்டிய அவசியத்தாலோ பிற பத்திரிகைகள் தாக்கி வருவதும் நாம் கண்டுவரும் கோலாகலம். 'மாமியார் உடைத்தால் மண்சட்டி மருமகள் உடைத்தால் பொன்சட்டி' என்றபடி செய்யும் அஷ்டகாசங்களும் நடக்கும் அசப்பாவிதங்களும் இருட்டடிப்புகளும் அனந்த மிருக்க எதிர்ப்புத் தாள்களை அடக்கியாகவேண்டும் என்று மேலிடம் வரைக்கும் புகார் கொண்டு போவதாயிருந்தால் கருத்திற்கேற்ற காரணங்கள் சொல்ல முடியாமையும் கையிலாகாத்தனமுமென்று தானே சொல்ல வேண்டும்.

மூடத்தனமாகவும் மடத்தனமாகவும் நம்பி வந்த காலம் மலையேறிவிட்டது. சட்ட நிபுணர்களே எதிர்ப்புத்தாள்களின் ஆசிரியர்களின் மூளைத்திறனை மெச்சுகிறார்கள் என்றால் இனியும் மேல்க்கொண்டு வக்காலத்து வாங்கிக்கொண்டு பத்தி பத்தியாய் எழுதவேண்டிய அவசியம் அறவே எழவில்லை என்பதை நடுநிலை வகிப்போர் ஒத்துக் கொள்வார்கள்.

ஒரு சகோதரப் பத்திரிகை எதிர்ப்புத்தாள்களை அடக்கியாக வேண்டுமென சர்தார் அவர்கள் சர்க்கார் அதிகாரிகளுக்கு உத்திரவு இட்டிருப்பதாகப் பொருள் படும் வகையில் எழுதியிருக்கும் தலையங்கத்தைக்காண நமக்கு சிரிப்புத்தான் ஏற்படுகிறது. அதே பத்திரிகையை மற்றுமொரு முறையும் சர்தார் அவர்களின் சொற்பொழிவை ஆர அமரப் படித்துப்பார்த்து அடங்கியிருக்கும் கருத்தை சரியாக புரிந்து கொள்ளும்படி மிக மிக கேட்டுக் கொள்ளுகின்றோம்.

அவர்கள் சுட்டிக்காட்டுவதும் அடக்கவேண்டுமென நினைப்பதும் மேலிடங்களுக்குக் கட்டிச் சோறு கட்டிக்கொண்டு செல்வதும் திராவிட கழகத்தையும் அக்கொள்கையை ஆதரிக்கும் பத்திரிகைகளைத் தானே குறிக்கின்றன என்பதை ஆடித்திரியும் பள்ளிப் பையனும் இது காலத்தில் நல்ல வண்ணம் அறிவான். அக்கழகத்தையும் அக்கழகத்தின் கொள்கையையும் பிரசாரத்தையும் மக்கள் கொண்டிருக்கும் மங்கா உணர்வையும் உணர்ச்சியையும் எவராலும் அடக்க முடியாதென்பதை இனியாவது பார்ப்பன சகோதர சகோதரிகள் அறிந்து தமது திட்டங்களையும் போக்குகளையும் நடவடிக்கைகளையும் இனியேனும் காலந் தாழ்த்தாது திருத்திக் கொண்டும் திருந்திக் கொண்டும் நாட்டின் நலனுக்கு, மக்களின் ஒற்றுமைக்கு, ஆரிய-திராவிட மக்களின் முன்னேற்றத்துக்குத் தக்கதோர் வழி காணுவார்கள் என்றே மிகவும் எதிர்பார்க்கின்றோம்.

——: (x) :——

அரிசி மூட்டை

இது விஷயமாக தோழர் பாக்கியம் பிள்ளை என்பவரிடத்திலிருந்து எமக்கு ஒரு லாயர் நோட்டீஸ் வந்திருக்கிறது. மிக்கதோர் மகிழ்ச்சி கொண்டோம். தோழர் பாக்கியம். பிள்ளை அவர்களின் சலசலப்புக்கும் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் நாம் பயந்தவர்களல்ல. நாங்கள் அறிய முற்படுவதெல்லாம் உண்மை என்ன? என்பதுவே. இருக்கட்டும்.

அடுத்த வாரம் கவனிப்போம்.

****

தேவை.

எல்லா ஊர்களிலும் "உடுமலை பீரங்கி"க்கு விளம்பரங்கள் சேகரிக்க நம்பிக்கையான ஏஜண்டுகள் உடனே தேவை.

இந்து மதம்

("உடுமலை பீரங்கி" முதல் புத்தகத்தில் ஒரு சிறு பகுதி)

ஹிந்துக்கள்

இதுவும் நிற்கட்டும். ஹிந்துக்கள்: ஆம்! ஹிந்துக்கள்! இவர்களே பெருவாரியாக யிருக்கின்ருர்கள் என்பது யாவரும் சொல்லி வரும் ஒரு சாதாரண சேதி. என்னைப் பொருத்த வரை எனக்கு இது வீண் பரிகாசமாகவே யிருக்கிறது. எவ் விதத்தில் இவர்கள் பெரும்பான்மையா யுள்ளவர்களோ நானறியேன். எவ்விதத்தில் ஒற்றுமை யுள்ளவர்களோ அதையும் நானறியேன். பழக்க வழக்கங்களிலா? அல்லது நடை உடை பாவனைகளிலா? அல்லது வேறெந்த விதத்தில் ஒன்றுபட்ட மக்கள். ஒரு மதத்திற்குள் எத்தனையோ மதங்கள். எத்தனையோ ஜாதிகள். அளவற்ற பிரிவுகள். நாட்டுக்கு நாடு வித்தியாசம். தேசத்திற்கு தேசம் விபரீதம். வீட்டுக்கு வீடு வேற்றுமை ஒரு மதத்தைத் தழுவுபவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்களுக் குள்ளாகவே உயர் குலத்தோர் எனவும் தீண்டப்படாதவர் என்னும்பாகுபாடுகள். பசுவைக்கொன்று புலாலாய் உண்பவனும் ஹிந்து. பசுவை பூஜிப்பவனும் ஹிந்து, புலாலையே அருந்தாத சைவரும் ஹிந்து. புலாலையே உணவாகக் கொள்ளும் அசைவரும் ஹிந்து, கன்னியைத்தான் கலியாணம் செய்ய வேண்டுமென்பவரும் ஹிந்து. விதவையைக கலியாணம் செய்யப்படாது எனச் சொல்பவரும் ஹிந்து. விதவையைக் கலியாணம் செய்து கொள்பவரும் ஹிந்து ஆகவே ஒரு முறையில்லை, வறையில்லை. ஒரு ஒழுங் கில்லை. ஒரு கட்டுப்பாடில்லை. ஒவ்வொருவருக்கும் அவரவரின் இஷ்டத்துக்கு தனிப்பட்ட பழக்க வழக்கங்கள். இவ்வித மிருந்தும் தான் ஹிந்து மதத்தை தழுவியவனே என்று சொல்லிக் கொள்வது தான் விநோதத்திலும் விநோதம். ஆனல் அதற்கும் காரணமில்லாமலில்லை.

ஹிந்து மதம்

ஹிந்து மதம் என்பது எவரால் ஏற்படுத்தப்பட்ட மதம் என்பது தான் இங்கெழும் கேள்வி. கிருஸ்துவ மதம் முகம்மதிய மதம், ஜெயின மதம், புத்த மதம், பிரம்ம சமாஜ், ஆர்ய சமாஜ் முதலியவைகள் ஏற்பட்டதற்கு கர்த்தாக்களாக ஒவ்வொருவர் ஏற்பட்டிருந்தார் என்பது யாவரும் அறிந்ததே. அதுவே போல் ஹிந்து மதத்தைப் புகுத்திய கர்த்தர் எவராயிருக்க முடியும்? என்ருலோ எவரும் இல்லையென்பது தான் நான் சொல்லக்கூடிய பதில். ஹிந்து என்ற மதமே கிடையாது. ஹிந்து மதம் என்பது ஆதியில் இருந்த மக்கள் அவர்களாகவே கைக்கொண்டு அனுசரித்து வந்த பழக்கங்களையும் நடை உடை பாவனைகளையுமே குறிப்பிடுவதாகும். அதனலேயே இவ்வளவு வித்தியாசங்கள். இவ்வித்தியாசங்கள் எப்படி இல்லாமலிருக்க முடியும்? இது விஷயமாகவும் அடுத்து வரும் புத்தகங்களில் மிக விரிவாக கவனிப்போம்.

வித்தியாசங்கள் பலவும் இருந்ததினலேயே பிற மதங்களுக்கு ஆதரவுகள் கிடைக்கலாயின. புதிதாகவும் உண்டாயின. ஹிந்து மதத்திற்குள்ளாகவே பல சீர்திருத்தத் தலைவர்களும் தோன்றலானுர்கள். அதனலேயே பிரிவுகளும் அதிகமாயின. பிளவுகளும் அதிகரித்தன. ஜன விருத்தி பெருகப் பெருக பிளவுகளும் பெருகிக் கொண்டு வரலாயின. இது காரணத்தின் பேரில் தான் எல்லா வித வித்தியாசங்களுடனும் ஹிந்து மதம் என்ற ஒரு சப்தம் இந்நாள் வரையும் காதில் பட்டு வரலாகிறது. இவ்வளவுதானே தவிர மற்றெந்த விதத்தில் ஹிந்துக்கள் எனச் சொல்லிக் கொள்பவர் மெஜாரிட்டியாவார்கள்? என்று யோசித்துப் பார்க்க வேண்டும்.

இத்தகைய மாறுபாடுகளும் வேறுபாடுகளும் கொண்ட ஒரு சமூகம் மெஜாரிடியெனப் பீத்திக்கொள்வதும் அச் சமூகத்தின் கையில் முஸ்லீம்களின் க்ஷேமம் மிகவும் பாதிக்கப்படும் என அஞ்சுவதும் அர்த்தமில்லாப் பேச்சு. மக்களை ஏய்க்கும்படியான பேச்சு.

குறிப்பு:—பல நண்பர்கள் வேண்டுகோளின் படிக்கும் எல்லாருக்கும் எளிதில் வாங்கக்கூடிய வசதி அளிக்கும் பொருட்டும் மார்ச் 1-ந் தேதியிலிருந்து "உடுமலை பீரங்கி" முதல் புத்தகம் பிரதி ஒன்று அணு பனிரெண்டு என இருந்ததை அணு ஆறாகக் குறைத்திருக்கிறோம்.

அவ்வந்த ஊரிலிருக்கும் "உடுமலை பீரங்கி" ஏஜண்டு இடமும் ரைல்வே ஹிக்கின்பாதம் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

பக்கங்கள் 120. சில பிரதிகளே உள்ளன.

பொன் மொழிகள்

'கே. இராமையா, இராயபுரம்'

எண் 1:— கொடிய பகைவனையும் கொடிய விலங்கையும் அன்புடன் நடத்து. நீ அன்பினல் கொடிய பகைவனையும் விலங்கையும் வசப்படுத்தலாம். அன்புக்குக் கட்டுப்படாத உயிர் இல்லை. ஆதலால் நீங்கள் அன்புகனிந்த மனமுடையவர்களாய் இருங்கள்.

— முகம்மது நபி

எண் 2:— அன்பு ஒன்றே ஆண்டவனை அடையச் செய்யும்.

இரவீந்திரநாத் தாகூர்

எண் 3:— உயிர் என்னும் மரத்துக்கு ஆணிவேர் அன்பேயாகும் உயிர்களை நேசிப்பதே உன் உயிரை வளர்ப்பதாகும்.

— இயேசுநாதர்

எண் 4:— அருள் உடையவர் ஆண்டவனை நெருங்கியவராவர்

— அரிஸ்டாட்டில்

எண் 5:— அன்பை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கமே மதம் எனப்படும்.

இராமகிருஷ்ணர்

எண் 6:— அன்பே சிறந்தது;

புத்தர்

எண் 7— எனக்கு உண்டான நோயின் துன்பங்களை எல்லாம் நான் மகிழ்ச்சியினலே கடத்து விட்டேன்

— டான்ஸ்

எண் 8:— நோன்பினல் நோயை விரட்டலாம்

காந்தியார்

எண் 9:— சொன்ன சொல்லைக் காப்பாற்றுபவனே மனிதர்களில் சிறந்தவன்

ஜேம்ஸ் ஆலன்

எண் 10:— தேட்பவன் கொடுக்கப் படுவான்

இயேசுநாதர்

எண் 11:— இயலாது என்பது என் அகராதியில் இல்லை, அது சோம்பேறிகளின் வார்த்தை

நெப்போலியன்

எண் 12:— தாய் நாடே உங்கள் உயிர் தாய் நாடு வாழ்ந்தால் தான் நீங்களும் வாழ்ந்தவர்கள் ஆவீர்கள்

— காந்தியடிகள்

எண் 13:— தாய் நாட்டிற்குத் தொண்டு புரியுங்கள் அது பூலோக ஸ்வர்க்கமாகும்

— சரோஜினி தேவியார்

எண் 14:— சுயநலமில்லாதவனே நாட்டுச் சேவை செய்யத்தகுந்தவன்

— காந்தியடிகள்

எண் 15:— வீரம் இல்லாதவன் மனிதன் ஆகான் நெப்போலியன்

எண் 16:—வீரம் இல்லாத மக்களைப் பெற்றநாடு அடிமை நாடாகவே இருக்கும்.

— முசோலினி

எண் 17:— வாழ்க்கையில் வெற்றி மேல் வெற்றி அடைவதற்கு வீரமும், உறுதியும் உடைய மனமே தேவையானது

— மார்டன்

எண் 18:— காலத்தின் நிலையை அறிந்துகொள். காலமே உன் உயிர். அதை வீணுக்குவது உன்னை நீயே கொலை செய்து கொள்வதாகும்.

— ஜேம்ஸ் ஆலன்

எண் 19:— மனநேர்மையே இன்பம் மனக் கோணலே துன்பம்

— ஜேம்ஸ் ஆலன்

எண் 20:— உயர்ந்த எண்ணங்கள் ஒருவனை உயர்ந்தவனுக்கும் தாழ்ந்த எண்ணங்கள் ஒருவனை தாழ்ந்தவனுக்கும்

— ஜேம்ஸ் ஆலன்

கடவுள் பேரால்!

'இடுவாய்—சு. மதி வரனன்'

அன்பே தெய்வமென் றறிந்து பின்னும்
அவனிக்கு ஒருவனே தேவ னென்றும்
இன்பமிகு நாட்டி லொரு குலமே யென்றும்
எடுத்து ரைத்துப் போந்தார்கள் அறிஞ ரெல்லாம்!

உள்ள மெலாம் பெருங் கோயி லான பின்பு
ஒரு சிலரின் உழுவடைந்த கற்பனையால்
கள்ள மிலா மாந்த ரெல்லாம் கருத்தழிந்து
கயவர் நிலையாகி விட்டார் கடவுள் பேரால்!

விருப்பு வெறுப்பில்லாது வைய மெல்லாம்
விரிந்து நிற்கும் உருவமில்லா அருபிதன்னை
தருக்கு மனம் படைத்த சிலர் பிழைப்புக்காகத்
தம தென்று கதை கட்டித் தரகரானுர்!

மதி மாய்க்கும் சாத்திர புராணம் பின்னும்
மனு நீதி வேதாக மங்க ளெல்லாம்
விதி வளர்த்து மாந்தர்களின் மதியைத் தின்ன
விலங்கிணங்களாக்கி வீட்டார் கடவுள்பேரால்!

வறுமையதால் மக்களெலாம் வாழ் விழந்து
வாடுகின்ரு நின்னட்டில் தெய்வங் கட்கு
அறுசுவையோ டுண்டிபடைத் தேழை சொத்தை
அழிக்கின்ரு ரந்தோ! அக்கடவுள் பேரால்!

பற்றற்ற பரமனுக்குப் பஞ்சா மிர்தம்
படைக்கின்ருர் பாட்டாளி பழங் கஞ்சிக்காய்
சுற்றுகின்ருன் தெருத்தெருவாய் சூழ்ச்சிக்காரர்
சுகபோக மெய்துகின்ருர் கடவுள் பேரால்!

அழியட்டும் மாந்தர்களின் அறிவைத்தின்னும்
அநீதி நிறை ஆரியத்தின் மடமை யெல்லாம்
ஓழியட்டும் சாதி மத வெறிச் செயல்கள்
ஓங்கட்டும் பகுத்தறிவுத் தமிழ்நீதி

திராவிடத்தை உய்விக்கவந்த பெரியார்

மா' முருகன், சிவந்தாகுளம்.

"ராமசாமியா! ஈரோட்டுக்காரன் தானே—அவன் பெரிய நாஸ்தீகனுச்சே"

"இந்த ஈ.வே.ரா. இருக்கிருரே அவர் ஒரு சுயநலம் கொண்ட மனிதன். தனக்கென்று ஒரு கட்சியை அமைத்துக்கொண்டு நாட்டை குட்டிச்சுவராக்குகிருர்"

நகரத்திலே, நகரசபையில், கடைகளில், கடைவீதிகளில் இப்படிப்பட்ட உரையாடல்களை இன்னும் நாம் கேட்டு சகித்துக்கொள்ள வேண்டிய நிலைமையில் தானிருக்கிறோம்-

பகுத்தறிவை வளர்க்க பாடுபட்ட அறிஞன் சாக்ரடிஸை அவன் காலத்து மக்கள் பைத்தியக்காரன் என்று தான் கூறினுர்கள். 'சாக்ரடிஸ்' இளைஞர்களைக் கெடுக்கிருன்; கடவுள் மீது நம்பிக்கை ஏற்படாவண்ணம் மக்களிடையே பிரசாரம் செய்கிருன் எனக்குற்றஞ்சாட்டி சாக்ரடிஸை சிறையில் அடைத்துசிந்தனையைசிதைத்து நஞ்சை உண்ணச்செய்து மடியச்செய்தனர் அவன் காலத்து மக்கள். அவன் காலமென்ருல்—கி. மு. நான்காவது நூற்ருண்டு—கிரேக்கநாட்டு மக்கள் சரியாக நாகரீகம் கற்றுக்கொள்ளாத காலம்—அறிவியல் வறண்டிருந்த காலம்—மக்களை அவர்களுடைய கொள்கை களினின்றும் இலகுவில் திருப்பமுடியாத காலம். ஆகவே சாக்ரடிஸை அவன் காலத்து மக்கள் அவமதித்திருக்கிருர்களே, அநியாயமாக நடத்தியிருக்கிருர்களே என்று நாம் ஆச்சரியமடைவதில் அர்த்தமில்லை. ஆனல் ஆகாயத்தில் பறக்கமுடியக்கூடிய இந்த நாளிலே—காசியில் பேசுவதை காஞ்சியில்கேட்கக் கூடிய இந்த நாளிலே- அணுவின் சக்தியால் ஒரு தேசத்தையே தரைமட்டமாக்க முடியக்கூடிய இந்த நாளிலே—இந்த இருபதாம் நூற்ருண்டிலே 'பகுத்தறிவு கொண்டு ஆராய்ந்து பார்', என்றும் சொல்லும் ஒரு கிழவரை நாக்கில் நரம்பின்றி திட்டும் துஷ்டர்களைப் பற்றி என்னவென்று கூறுவது.

கடவுள் இல்லை யென்ருே வேண்டாமென்ருே பெரியார் ராமசாமி கூறவில்லையே. தலை மீது தையலை வைத்துக் கொண்டலையும் தெய்வம், காளை மீதேறும் கடவுள், பருந்தேறும் சாமி, உந்தியில் தோன்றிய தேவன் இவைகளையும் இவை போன்ற, கயமைத்தனமும் கபோதித்தனமும் பொருந்திய தெய்வங்களையும் தொழாதீர்கள் என்று கூறினுல் பெரியார் நாஸ்திகரா? பிறநாட்டார் கண்டால் நகைக்கக் கூடிய அநாகரீகமான, காட்டுமிராண்டித் தனமான கடவுள் வழிபாடுகளை விட்டொழியுங்கள் என்று பெரியார் கூறினுல் நாஸ்திகரா? மூடப்பழக்க வழக்கங்களை முற்றிலும் ஒழித்துவிட்டு கல்வித்துறையிலும் விஞ்ஞானத்துறையிலும் உங்கள் முன்னேற்றத்தைக் காட்டுங்கள் என்று பெரியார் கூறினுல் அவர் நாஸ்திகரா? கடவுளின் தனிஉருவத் தோற்றத்தில் தனக்கு நம்பிக்கை யில்லையென்று காந்திஜி கூறினுரே. அவரும் நாஸ்திகர்தானு?

பெரியார் தன் அறிவுக்கு அறமென்று பட்டதை அழுத்தந்திருத்தமாக கூறுகிருர்; அல்லாததை அக்கணமே அடாதது என்கிருர்; தன் மனதுக்கு நியாயமென்று தோன்றியதை ஒருபொழுதும் மறைக்கவே மாட்டார்; இன்ன விஷயத்தை வெளிப்படையாகக் கூறினுல் இன்னுருடைய அதிருப்தியை பெறவேண்டியதிருக்குமே என்று கருதாது அதைக் கூறுவதன் மூலம் மக்களுக்கு நன்மை ஒரு சிறிது செய்யக்கூடுமானுல் அதைக் கூறத் தயங்கமாட்டார். உதாரணமாக இந்து மதம் ஒழிக்கப்படாதவரையில், பார்ப்பனீயம் ஒழிக்கப்படாதவரையில், காங்கிரஸ் ஸ்தாபனம் கலைக்கப்படாதவரையில் திராவிட மக்கள் முன்னேற முடியாது என்பதை உணர்ந்த பெரியாரவர்கள் 1927-ல் காந்தியாரோடு கலந்து பேசிய பொழுது இவ்விஷயங்களை அவரிடம் எடுத்துரைப்பதன் மூலம் காந்தியாரின் அதிருப்திக்கு ஆளாக வேண்டியதிருக்குமே என்று கருதாமல் தைரியமாக வற்புறுத்திக் கூறினுர்கள். இத்தகைய வீரரைத் தான் சில வீணர்கள் சுயநலப்பித்தரென்று கூறுகிருர்கள்.

உத்யோகங்களிலும், பதவிகளிலும், அறிவு, திறமை, தகுதி இவைகளைப் பொறுத்துத்தான் அளிக்கப் படுமென்றிருக்குமானுல் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரும், பிற்போக்கு சமூகத்தினரும் எவ்வித உரிமையுமின்றி நசுக்கப்பட்டு விடுவார்களென்று கருதி வகுப்புவாரி பிரதிநிதித்துவத் தீர்மானத்தை அனேக நண்பர்களுடைய விருப்பத்திற் கெதிராக 6 காங்கிரஸ் மகா நாடுகளில் வற்புறுத்தி பிரேரேபித்தார். தீர்மானம் 6 மகா நாடுகளிலும் நிராகரிக்கப்பட்டு, தோல்வியடையவும் செய்யப்பட்டது. குமுறிய உள்ளத்துடன், இனி காங்கிரஸிலிருந்து கொண்டு பார்ப்பனரல்லாதாருக்கு நன்மை செய்ய இயலாது என்பதை அறிந்து காங்கிரஸ் ஸ்தாபனத்தை விட்டு வெளியேறினுர்.

பின் ராஜாஜி, முத்துரங்க முதலியார் போன்ற காங்கிரஸ் தோழர்களால் நமது ஒப்பற்றதலைவர் பெரியார் திரும்பவும் வந்து மாகாண காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராக யிருந்துகொண்டு தொண்டாற்றும்படி பன்முறை அழைக்கப்பட்டார். நமது தன்மான இயக்கத் தந்தை அழைப்பை மறுத்துவிட்டார். அவர் அன்று அழைப்பை ஏற்று காங்கிரஸ் தலைமை பீடத்திலமர்ந்திருந்தால் இன்று நிலைமையே மாறிப் போயிருக்கும். காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அவர் திரும்பவும் சேர்ந்திருந்தால் இன்று...

...அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ராஷ்டிரபதியாகி யிருக்கலாம்; பெரியாருக்குச்சென்றவிடமெல்லாம் வரவேற்புகளும், உபசாரங்களும்—ஏக அமர்க்களமாக இருக்கும். பெரியாரைப்பற்றி துதிபாடா ஏடுகளைக் காணமுடியாது. நாட்டில் உலவும் பத்திரிகைகள் பெரியார் படத்தைத்தாங்கி விசேஷ அலங்காரத்துடன் வெளிவரும். நேருகூட பெரியார் ஆலோசனைப் படியே நடப்பார் ஆயிரந்தடவை டில்லிக்கும் ஈரோட்டுக்கும் ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்து கொண்டிருப்பார். பல அன்னிய நாட்டு அறிஞர்களுடன் அளவளாவிக்கொண்டிருப்பார்......

இப்படிப்பட்ட ஒரு நிலையை பெரியார் விரும்பினுரில்லை. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் சீரிய மந்திரத்தை மனதிற் கொண்டு, திராவிட மக்களுக்கு சேவை புரிவதையே தனது லட்சியமாக்கிக்கொண்டு அன்று வலிய வந்த வாய்ப்பு உதறித்தள்ளினுர் இத்தகைய தியாக மூர்த்தியையா சுயநலம் கொண்டவர் என்று கூறுவது, மக்கள்—சாதாரண மக்கள் பெரியாரவர்களைத் தவருக அறிந்து கொண்டிருக்கிருர்கள், அறிவிக்கப் பட்டிருக்கிருர்கள், உண்மையானப் பெரியாரை மக்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. திராவிட மக்கள் ராமசாமி பெரியாரை எங்கு சரியாகத் தெரிந்து கொள்ளுகிருர்களோ: தெரிந்துகொண்டால் நமது இனம் சீரழிந்துபோகுமேஎன்றஞ்சி ஆரிய ஏடுகள் பெரியாரைத் திரையிட்டு மறைத்துக் கொண்டிருக்கின்றன- இதனுலன்ருே ராமசாமி நாயக்கர் என்பவன் கைது செய்யப் பட்டார், என்று அகம்பாவத்துடன் ஒரு ஆரிய ஏடு எழுதியது. மக்கள் பகுத்தறிவு கண்ணுடிப் போட்டு பார்த்தல் வேண்டும்.

பெரியார் திராவிடநாட்டின் தப்பிப்பிறந்த தவச்செல்வர்; இந்த நாட்டின் அரிய பொக்கிஷம், பெரியாரைப் பயன் படுத்திக்கொள்ள திராவிட நாட்டு மக்கள் தவருவார்களேயானுல் பிற்கால சரித்திரம் நம்மைக் குற்றஞ்சாட்டும்.

சிந்தனை

[மா. சு.]

—: (x) :—

எல்லாம் அந்த 'அண்ணு'லையானுக்குத்தான் தெரியும்! அறநிலைப் பாதுகாப்பு சட்ட திருத்த மசோதாவைக் கண்டு சிலர் 'மதத்துக்கு ஆபத்து' என்கிருர்கள். நமது தோழர் சொல்லுகிருர், "இந்த மாதிரி மசோதா வரா விட்டால் மடத்துக்கு ஆபத்து" என்று.

'மதம், மடம், மடாதிபதிகள்' எல்லாவற்றுக்குமே ஆபத்து நெருங்கிக் கொண்டுதானிருக்கிறது" என்கிருர் உலகப் போக்கை உணர்ந்த ஒரு அறிவாளி;

"எல்லாம் சிவன் செயல்!" என்பது திரு. சைவத்திருமேனி சொல்வது! பழமைப் பண்டாரமோ இது கருப்புச் சட்டைக்காரன் வேலை" என்று அங்கலாய்க்கிருர்!

"தீர்ப்பு"

மாத வெளியீடு

ஆசிரியர் : சிந்தனை?

தனி பிரதி விலை அணு 0—2—0

கிடைக்குமிடம்,

"சிந்தனை" பிரசுரம்

T. T. P. ரோடு

விஜயபுரம், திருவாரூர்

எல்லா ஊர்களிலும் நம்பிக்கையான ஏஜண்டுகள் தேவை.

6-ம் பக்கம் தொடர்ச்சி

2) சட்டசபைகளில் வாதாடல்

3) பத்திரிகைகள் மூலம் மசோதாவை எதிர்த்தல்.

4) சட்டத்தை மக்களின் வாக்கெடுப்பில் விடச் செய்தல்.

5) பூசாரிகள், மடாதிபதிகள் ஆகிய அனைவரும் வேலை நிறுத்தம் செய்தல்.

6) சட்டசபை மெம்பர்களுக்குப் பணம் கொடுத்து சட்டத்தை எதிர்க்கச் செய்தல.

7) ரமணரிஷியிடம் சென்று விஷயத்தைக் கூறி, ஓமந்துராருக்கு அறிவுரை கூறச்சொல்லி சட்டத்தை நிறுத்தல்.

8) சட்டத்தை ஆதரிப்பவர்கள் மீது வஞ்சம் தீர்த்தல்.

இந்த விதமான எட்டு தீர்மானங்களைக் கொண்டும் நாம் எதிர்த்து இந்து தரும பரிபாலனத்தை நாமே மேற்கொள்ள வேண்டும். இத்தீர்மானங்கள் சரியல்லவென்று கருதுபவர்கள் யாராவது இருந்தால் எழுந்து நின்று தெரிவிக்கலாம்.

எல்லோரும் :— தீர்மானங்கள் முற்றிலும் நியாயமானவை. அதன் படியே செய்கிருேம்.

பண்டார சன்னதி :—சரி, அப்படியானுல் இப்பொழுதிலிருந்தே தீர்மானங்கள்படி காரியங்களைத் துவக்குங்கள். உண்ணுவிரதத்தை கணபதி ஐயர் மேற்கொள்ளட்டும்.

கணபதி ஐயர்:—ஐயையோ! நானு? என்னுல் ஒரு க்ஷணமும் பசிதாங்க முடியாதே சுவாமி. அப்படியிருக்கும்போது...

பண்டார சன்னதி:—பயம் வேண்டாம். குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரும் அறியாத வகையில் உனக்கு உணவு கிடைக்கும்.

கணபதி ஐயர்:—அப்படியானுல் சரி சுவாமி.

பண்டார சன்னதி:—பத்திரிக்காசிரியர்கள் உண்ணுவிரதத்தைப் பற்றி மிகைப்படுத்தி எழுத வேண்டும்.

பத்திரிகாசிரியர்கள் :— அப்படியே செய்கிருேம் சுவாமி.

பண்டார சன்னதி:—சரி ஹிந்து மதம் கீ......

எல்லோரும்:—ஜே! ஜே!! ஜே!!!

பண்டார சன்னதி :—வெற்றி...

எல்லோரும்:—நமதே.

பண்டார சன்னதி:—வெற்றி...

எல்லோரும்:—நமதே.

பண்டாரசன்னதி: -நாஸ்திகர்...

எல்லோரும்:—ஒழிக.

பண்டார சன்னதி:—சரி, கூட்டம் கலையலாம்-

ஓர் நாடகம்

ஹிந்துமத தர்ம பரிபாலன எதிர்ப்பு மகாநாடு

[உடுமலை. எஸ். ரசாக்]

காட்சி 1.

இடம்:- பண்டார சன்னதியின் பங்களா.

காலம்:- காலை நேரம்.

பாத்திரங்கள்:- பண்ணைக்கார வீரப்பன், பண்டார சன்னதி.

பண்டாரசன்னதி:- வீரப்பா! இன்று உன்னால் எனக்கொரு காரியம் ஆகவேண்டுமே?

வீரப்பன்:- என்னாலா? அது என்ன சுவாமி?

பண்டாரசன்னதி:- அப்படி ஒன்றும் பிரமாதமான காரியமல்ல. உன் பண்ணையிலிருக்கும் பசுங்கிளி அமிர்தவல்லியைப் பற்றியது. அவளை நான் இன்று என் அந்தரங்க அறையில் ஆலிங்கனம்செய்ய வேண்டும். அதைச் சரிப்படுத்த உன்னால்தான் முடியும்.

வீரப்பன்:- அது கடினமான காரியமாயிற்றே, சுவாமி.

பண்டாரசன்னதி:- சீ மடையா! எதடா கடினமான காரியம்? கேவலம், ஓர் அணங்கை ஆடவனுக்கு அடிமைப் படுத்துவது கடினமான காரியமா?

வீரப்பன்:- கோபிக்கக் கூடாது சுவாமி? அவள் கல்யாணமாகாத கன்னியாயிற்றே! கன்னிப்பாவம் மகா பொல்லாதது என்றுதான்...

பண்டாரசன்னதி:- மூடு வாயை இனி, நீ என் பண்ணையிலிருக்க தகுதியற்றவன். நான் காரிகை வேண்டுமென்று கேட்டால் நீ கன்னிப் பாவம் என்று கதை அளக்கிறாய். கடைசியாகச் சொல்லுகிறேன், இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு அமிர்தவல்லி என் அந்தரங்க அறையில் இருக்க வேண்டும். இல்லையேல் நீ பண்ணையைவிட்டு வெளியே நிற்கவேண்டும் ஆமாம், ஜாக்கிரதை. (எழுந்து போகிறார்.)

வீரப்பன்:- முயன்று பார்க்கிறேன் சுவாமி. (போய் விடுகிறான்).

காட்சி 2.

இடம்:- தாசி விமலா வீடு.

காலம்:- மாலை.

பாத்திரங்கள்:- விமலா, பண்டார சன்னதி.

பண்டாரசன்னதி:- (வந்து கொண்டே) விமலா...?

விமலா:- வாருங்கள் சுவாமி! இன்று ஏது இவ்வளவு சீக்கிரமாக வந்து விட்டீர்கள்?

பண்டாரசன்னதி:- உன் நினைவு உறுத்திற்று; ஓடோடியும் வந்தேன்.

விமலா:- அதுசரி. நான் கேட்ட முத்துமாலையைக் கொணர்ந்தீர்களா?

பண்டாரசன்னதி:- கண்ணே நீ கேட்டு நான் மறுத்ததுண்டா? காளிதேவியின் திருக்கழுத்தில் ஜொலிக்கும் ஹாரம் இன்று விமலா தேவியின் கழுத்தை அலங்கரிக்கட்டும். இதோ ஏற்றுக்கொள்.

விமலா:- என்ன சுவாமி! தாயின் கழுத்திலிருக்கும் மாலை தாசிக்கா? ஐயோ வேண்டாம். கொண்டுபோய் அம்பிகையையே அலங்கரித்துவிடுங்கள்.

பண்டாரசன்னதி:- பைத்தியக்காரி பயப்படாதே. காளி ஓர் கற்சிலை. ஜீவனற்ற உருவம். கற்சிலையின் மீது முத்து ஹாரமா? இல்லை. பொன்மேனி படைத்த பெண்மீது இருந்தால் முத்துமாலை முன்னிலும் எண்மடங்கு அதிகம் பிரகாசிக்கும்.

விமலா:- அது சரி சுவாமி. ஆனால், ஆண்டவன் பொருளை அணங்கிற்குக் கொடுப்பதை யாராவது அறிந்து கொண்டால்?

பண்டாரசன்னதி:- அடி பேதையே! பண்டாரசன்னதிகள் செலவழித்தது போக மீதிமிருப்பது தானே பகவானுக்கு? அஞ்சுகமே! அஞ்சாதே. கொஞ்ச வா! கூடிக் குலவிட வா!! காமச் சுனையிலே அமுதநீர் பருக வா!!!

விமலா:- சரி சுவாமி! செல்வோம் வாருங்கள்.

(இருவரும் எழுந்து படுக்கையறைக்குச் செல்கின்றனர்.)

காட்சி 3.

இடம்:- பண்டார சன்னதியின் அந்தரங்க அறை.

காலம்:- இரவு 12 மணி.

பாத்திரங்கள்:- பண்டார சன்னதி, வீரப்பன், (அமிர்தவல்லி)

வீரப்பன்:- சுவாமி! தங்கள் சித்தம்போல் சிங்காரியை சிரமப்பட்டுக் கொண்டுவந்து விட்டேன்.

பண்டாரசன்னதி:- சபாஷ் வீரப்பன் என்ற பெயர் உனக்கே ஏற்றது இளமயில் என்ன சொன்னாள்?

வீரப்பன்:—சன்னதியைச் சபிக்கிறாள். காமாந்தகாரன் என்று கடும் வசைமாறி பொழிகின்றாள். இஷ்டத்திற்கு இசையேன் என்று இறைச்சலிடுகிறாள். இன்னும்......

பண்டார சன்னதி:—போதும் நிறுத்து. எங்கே இருக்கிறாள் அந்த ஆணவக்காரி?

வீரப்பன்:—அடுத்த அறையில்.

பண்டார சன்னதி:—அவளைக் கொண்டுவா. ஆணவத்தை அழித்து அறிவு புகட்டுகிறேன்.

[வீரப்பன் அமிர்தவல்லியை அந்தரங்க அறையில் தள்ளிவிட்டு வெளியே போய்விடுகிறான்.]

பண்டார சன்னதி:—ஓஹோ! அகம்பாவம் பிடித்த அமிர்தவல்லியா? வாம்மா வா. துன்பப்படாதே, துணைபுரிய நானிருக்கிறேன்.

அமிர்தவல்லி:—சீ, துன்மார்க்கா! தூரநில். கடவுள் பக்தனைப்போல் காஷாயவேடந்தரித்து, கன்னிகை லோலனாகக் காட்சியளிக்கிறாய்.

பண்டார சன்னதி:—ஆண்டவனே அணங்குகளின் ஆசைக் காதலனாக இருக்கும் பொழுது, அடியார்களிருப்பதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அமிர்தவல்லி:— அபசாரம், அபசாரம். ஆண்டவன் மீதா அபசார வார்த்தைகள்?

பண்டார சன்னதி:—எதடி அபசாரம்? சிற்றின்பப் பொய்கையைக் கடந்த பின்புதான் பேரின்பமென்னும் பெரும் மாளிகையை அடைய வேண்டுமென்று வேதங்களே விளக்குகின்றன. வா, அதை அடைய வகை சொல்லுகிறேன்-

அமிர்தவல்லி:—அறிவு கெட்ட அற்பனே! அறிந்தேன் உன் அந்தரங்கத்தை. பசப்பு வார்த்தைகள் பேசி, பறிக்கப் பார்க்கிறாய் என் கற்பை. அதற்கு அமிர்தவல்லி இடங்கொடுக்க மாட்டாள் என்பதை அறிந்துகொள்.

பண்டார சன்னதி:—அமிர்தவல்லி! நீ என் இன்பவல்லியல்லவா? என்னைக் கண்டதும் ஏன் மிரளுகிறாய்? கற்பழியுமென்ற கலக்கமா? அல்லது நான் இன்று மட்டும் உன்னைப் பயன்படுத்திக் கொண்டு பிறகு கைவிட்டுவிடுவேன் என்ற ஏக்கமா? கவலைப்படாதே. கடைசிவரையில் என் இதயராணியாகவே ஏற்றுக் கொள்ளுகிறேன். பொன்னையும், மணியையும் கொண்டு உன் பொன்மேனியைப் புதுப்பிக்கிறேன். நீ அடியாளிடும் பணியை முடிமேற்கொண்டு முடிக்கிறேன். இன்பபுரிக்கி அழைத்துச் சென்று உன் துன்பம் துடைக்கிறேன்.

அமிர்தவல்லி:—அடே மிருக ஜன்மமே! உன் முரட்டு வர்ணிப்பை நிறுத்து. உன்போன்ற பூசுரப் பூனைகள் செய்யும் நாசகாரியத்தை நாட்டுற் கெடுத்துறைத்து, நாட்டின் நலத்தைப் பேணுவேன்.

பண்டார சன்னதி:—மான்விழி மாதே! தப்பிவிடலாம் என்று மனப்பால் குடிக்காதே. மது வருந்திவிட்டு மங்கையினின்பம் கொடு. இதோவேண்டியவரைக்கும் பருகு.

அமிர்தவல்லி:—ஓஹோ!! மது விலக்கு அமுலிலிருக்கும் போது உனக்கு மட்டும் இது எப்படி கிடைத்தது?

பண்டார சன்னதி:—சுவாமி பூஜைக்கென்று கொணர்ந்து ஆசாமியின் ஆனந்த பூஜைக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறேன். அதிருக்கட்டும், நான் கோரியதை நிறைவேற்றமாட்டாயா?

அமிர்தவல்லி:—முடியாது, ஒருக்காலும் முடியாது.

பண்டார சன்னதி:— என்ன முடியாதா? இதோ பார் உன்னை...

[அவளை நெருங்குகிறான். அர்ச்சகர், டிரஸ்டி முதலானோர் ஓடி வருகிறார்கள்.]

அர்ச்சகர்:—சுவாமி! காத்தருள வேண்டும். காத்தருள வேண்டும்.

பண்டார சன்னதி:— (தனக்குள்) சிவபூஜையில் கரடிவிடுகிறார்கள் மடையர்கள். சமயம் தெரியாத சண்டாளர்கள். (அர்ச்சகரைப் பார்த்து) என்ன சுவாமி! ஏன் இந்தப் பதட்டம்?

அர்ச்சகர்:—சுவாமி! நம் இந்து மதத்தையே நசித்து விடக்கூடிய திட்டத்தை வகுத்து சட்டமாக்கிக் கொண்டு வருகிறார்கள் சர்க்கார். இந்துமத தரும பரிபாலன சொத்துக்களை இனிமேல் அரசாங்கமே நிர்வகிக்குமாம்.

பண்டார சன்னதி:—ஐயோ; அப்படியா சமாச்சாரம்? நம் இன்ப வாழ்க்கைக்கே இறுதிப் புள்ளி வைக்கக்கூடிய சட்டமாக வல்லவா இருக்கிறது? இதை நாம் உடனே எதிர்த்துத் தகர்த்தெறிய வேண்டும். இன்றேல், இத்தனை நாளும் உடல் உழைப்பின்றி உல்லாச வாழ்க்கை வாழ்ந்த நாம், உழைத்து உருக்குலைய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். உடனே, நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்துமத தரும பரிபாலன எதிர்ப்பு மகாநாடு ஒன்று கூட்டி அதில் இம்மசோதாவை எம்மெம் முறையில் எதிர்ப்பது என்ற திட்டங்கள் தயார் செய்யவேண்டும். உடனே மகாநாட்டிற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடக்கட்டும். இனி, நீங்களெல்லாம் கவலையின்றி வீடு திரும்புங்கள். வெற்றி நிச்சயம் நமக்கே. ஓம் நமசிவாயம்! நமசிவாயம்! (எல்லோரும் கலைகிறார்கள்.)

காட்சி 4

இடம்: மகாநாட்டுப் பந்தல்.

காலம்: காலை.

பாத்திரங்கள்: பண்டார சன்னதி, டிரஸ்டி, பூசாரிகள், இனாம்தாரிகள், ஜமீன்தார்கள், சிஷ்டகோடிகள், சில பத்திரிகாசிரியர்கள்.

பண்டாரசன்னதி:—பக்தகோடிகளே! சீமான்களே! சிஷ்யர்களே! இன்று நாம் அவசரமாக இந்த மகாநாடு கூட்டவேண்டிய காரணம் என்ன? என்றும் மகாநாடு கூட்டியறியாத நாம், இன்று ஓர் மகாநாடு கூட்டவேண்டிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆண்டவன் பக்தர்களான நமக்கு ஆபத்து வந்துவிட்டது. அதை அகற்றவே இம்மகாநாடு கூட்டினோம்.

இரவும், பகலும் ஆண்டவன் சன்னதியிலேயே திருப்பணிபுரியும் எங்களுக்கு ஆண்டவன் பொருளை செலவழிக்க உரிமையில்லை என்று அரசாங்கத்தார் கூறுகிறார்கள். தகப்பன் சொத்துக்கு மகன் வாரிசாய் இருப்பதுபோல்— உழைப்பாளி ஊதியம் பெறுவதுபோல், எங்களுக்கும் பகவானின் பொருள்களைச் செலவழிக்க உரிமை இருக்கிறது. அதைத் தடுக்கச் சட்டம் இயற்றுகிறது அரசாங்கம். இனத்துரோகிகள் அதற்கு ஒத்தாசை புரிகின்றன. ஆண்டவன் விஷயத்தில் அரசாங்கம் தலையிடலாமா? சூனாமானாக்காரர்களின் வாடை அரசாங்கத்திற்கும் தட்டிவிட்டது போலும்.

தற்போதிருக்கும் நிலையைப் பார்த்தால் வெகு விரைவில் சட்டம் அமுலுக்கு வந்துவிடும்போல் தோன்றுகிறது. ஆகையால், நாம் இனிமேல் பெண் லீலைகளை மறந்துவிட்டு, சட்டத்தை எதிர்த்துத் தடைப்படுத்த வேண்டும். சட்டம் உருவாயிற்றென்றால் இந்துமதம், மடாதிபதிகள், பூசாரிகள் உள்பட எல்லோரும் அழியவேண்டிய நிலை ஏற்படும். எனவே, நான் தயார் செய்துகொண்டு வந்திருக்கும் திட்டங்களின்படி அரசாங்கத்தை எதிர்த்து சட்டத்தை ரத்து செய்ய வேண்டும்.

தீர்மானங்களாவன:—

1) தரும பரிபாலன மசோதாவை எதிர்த்து உண்ணாவிருதமிருத்தல. 6-ம் பக்கம் பார்க்க

1ம் பக்கம் தொடர்ச்சி

காணுகிறான். காரணம் அறிந்ததும் வேலுண்டு ராணி புஷ்பாவுக்கா ஜமீன் உரிமையாக்க வேண்டும் என்றும் நல்ல தம்பி பைத்தியக்காரனென்றும் அவன் எழுதிவைத்தது செல்லாது—நியாயப்படி ஜமீன் புஷ்பாவிற்குத்தான் சேர வேண்டுமென்று நீதிமன்றத்தில் வாதாடுகிறான். நீதிமன்றத்தில் பூபதி நல்ல தம்பியின்மேல் பல குற்றங்களைச் சாட்டி அவனைப் பைத்தியக்காரன் என்று கூறுகிறான். இதற்கெல்லாம் பதில் கூறும்படி நீதிபதி நல்ல தம்பியைக் கேட்கிறார். நல்ல தம்பி மறுக்கவே அவனுக்காக—அவனுடன் சேர்ந்து கிராம மக்களுக்கு உழைத்த ராணியம்மாள் வாக்குவாதம் செய்கிறாள். பொதுமக்கள் நல்ல தம்பியைப் பேசும்படி வற்புறுத்தவே நல்ல தம்பி எழுந்து அரியதொரு வாக்குவாதத்தை நிகழ்த்துகிறான்—கிந்தனார் கதை பைத்தியக்காரத்தனமானதா? என்று காட்ட அதனை நீதிமன்றத்திலே கூறுகிறான். குடிமக்கள் ஒருமித்துக் கூறிய நல்ல சாட்சியத்தால் நல்ல தம்பிக்கு சாதகமாக முடிகிறது தீர்ப்பு; வெற்றி பெற்ற—கிராம நலனுக்காகப் பாடுபட்ட நல்ல தம்பியை பாராட்டுகின்றனர் குடிமக்கள்.

இதுதான் கதை!

கிராமத்தில் நடக்கும் கூத்தில் கிருஷ்ணன்—மதுரம் கோமாளி கோமாளிச்சியாக வந்து இந்திரலோகத்தில் மதுவிலக்கின் பெருமையைப் பற்றியும் தமிழகத்தின் சிறப்புப் பற்றியும் விளக்குகின்ற கட்டமும் 8 அடி உயரம் 7 அடி அகலம் 6 அடி ஆழம் தங்கம்! என்ற சொற்களைக் கொண்டு செஞ்சிக்கோட்டையில் புதையல் இருப்பதாகக் கற்பித்து ராணியம்மாளின் கருமித் தந்தையை ஏழைகளுக்கு அன்னதானம் செய்துவைக்கும் நிகழ்ச்சியும் கிந்தனார் காலட்சேபமும் அறிவுக்கும் கருத்துக்கும் விருந்தாகப் படத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இதனால் படம் விறுவிறுப்பாக ஓடுகிறது. கல்லூரியில் நடைபெறும் கிளியோபாட்ரா நாடகத்தில் கிளியோபாட்ராவாக நடிக்கும் பானுமதி கிளியோபாட்ராவாகவே மாறிவிடுகிறார்.

நல்ல தம்பியைப் பார்த்த பிறகு தமிழர் படக் கலைக்கு நல்ல காலம் பிறந்துவிட்டது என்றுதான் எனக்குக் கூறத் தோன்றுகிறது. கிருஷ்ணன் அவர்களது சிந்தனையின் வைரத்தையும் நடிப்பின் மறுமலர்ச்சியும் பைத்தியக்காரனில் கண்டோம். கன்னிகாவிலோ அதிகம் என்று கூறலாம். ஆனால் நல்ல தம்பியிலேயோ----? படமுழுவதும் சிந்திக்கத் தூண்டும் வகையிலே சுயமரியாதைப் பண்பை மக்கள் உள்ளத்திலே பக்குவமாக மலரும்படி வாரி இறைக்கிறார். கலைவாணர் என். எஸ். கே. ஒவ்வொரு தமிழ் மகனும் நல்ல தம்பியாக மாறவேண்டும் என்ற எண்ணத்தை மக்களிடையே புகுத்திவிடும்வகையில் நடித்து நமது பாராட்டைப் பெறுகிறார். ஜமீன்தாரி நிலங்கள் என்று இன்று அழைக்கப்படுகிற வயற்புறங்கள் சட்டப்படி ஜமீன்தார்களுக்குத்தான் சொந்தம் அவற்றின் உழுது பயிரிடும் உழவர்கள் வெறும் கூலிகளே! என்ற விதியைச்சாடி அறிஞர் அண்ணா உழவர்கள்தான் அந்த நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள், ஜமீன்தார்கள் அல்ல என்ற உண்மையை ஜமீன் ஒழிப்பின் உயரிய தத்துவத்தை உணர்த்துகிறார். நல்ல தம்பியின் மூலமாக! புரட்சிகரமான கருத்துக்களை வேடிக்கையான வசனங்களை முறையே புகுத்தி சினிமாத் துறையிலேயே ஒரு மாற்றம் ஏற்படுத்தியுள்ளார். நடிகர்களுக்கேற்ற கதையை அமைத்துள்ளார்! பானுமதியின் நடிப்பு கச்சிதமாக படாடோப வாழ்வை சித்தரிக்கும் வகையில் அமைந்துள்ளது. அவரது பாடல்கள் சுவர்க்கமோ பாவுரமா நினைவுக்குக் கொண்டு வருகின்றன. சகஸ்ரநாமம் தனது பாகத்தைத் திறம்பட நடித்து ரசிகர்களின் பாராட்டைப் பெறுகிறார். மதுரத்தை கீழே தள்ளி நல்ல தம்பி அறையும் பொழுதும் நீதிமன்றத்திலே அவர் நல்ல தம்பியின் மீது குற்றஞ்சாட்டும் பொழுதும் உச்சநிலையை அடைந்துவிடுகிறார். உடுமலை நாராயண கவியின் பாடல்கள் கருத்துச் செறிவுடன் நாட்டு நிலையைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியதாகும். கடவுள் பக்தி தனக்கு இல்லை என்று கூறிய ஒரு கிராமக் குடிமகனுக்கு நல்ல தம்பி தான் வணங்கும் தெய்வங்களான தாய் தந்தையரையும் த்தர்—ஏசுபிரான்— காந்தியடிகள் படத்தையும் காண்பித்து அவனுடைய பந்தனையைத் தெளியவைக்கும் கட்டம் சி ஒவ்வொருவர் மனதிலும் பதியும் வகையில் அமைந்துள்ளது.

இருந்தும் சில குறைகளுண்டு. நல்ல தம்பி ரயிலில் வந்துகொண்டிருக்கும் பொழுது ராணியம்மாளைக் கண்டவுடன் ஓடும் ரயிலிலிருந்து கீழே குதிப்பது அறிவுக்குப் பொருந்தாதது. ஆனால் இவை போன்ற குறைகள் நல்ல தம்பியில் அமைந்துள்ள சிறந்த அம்சங்களை மறைத்து விடுகின்றன.

நல்ல தம்பியைப் பார்த்துவிட்டு வெளியே வரும் மக்கள் அனைவர் உள்ளத்திலும் நல்ல தம்பியே நடமாடுகிறான். இத்தகைய நல்ல தம்பியை நமக்களித்த அண்ணாவையும் இது போன்ற சீர்திருத்தப் படங்களைப் பிடிக்க முன்வந்த என்.எஸ்.கே. பிக்சர்சாரையும் தமிழகம் வாழ்த்துகிறது. இனிப் பிடிக்கப் போகும் படங்கள் யாவும் நல்ல தம்பியைப் பின்பற்றும் என்று நிச்சயம் நம்பலாம். ஏனெனில் காலம் மாற மாற கருத்தும் மாறுகிறதல்லவா?

—: (x) :—

உடுமலை பீரங்கி

பிரதி சனிக்கிழமையும் வெளிவரும்

சந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்
33, திருவேங்கிட முதலித் தெரு
பெரியமேட்டு. சென்னை. 3.

எல்லா ஊர்களிலும்
ஹிக்கின்பாதம்ஸ் ரைல்வே புக் ஸ்டால்களிலும் கிடைக்கும்.

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.



Edited and Published by B. Ranganatham. Mg. Editor R. Rajagopal 33 Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the "LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.